# மொகலாய கட்டடக் கலையை பெருமையாகப் பேசுவதுபோல் வருங்காலத்தில் 'ஸ்டாலின் கட்டடக் கலை' என்று பேசுவர்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு... 6 ஆம் பக்கத் தொடர்ச்சி

3) சென்னை, பூந்தமல்லியில் உள்ள விக்டரி நினைவு பார்வையற்றோர் பள்ளிக் கட்டடம் ரூ.24.20 கோடி மதிப்பீட்டிலும்,

4) சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள பேராசிரியர் அன்பழகன் வளாகத்தில் (பொதுக் கல்வித் துறை வளாகம்) உள்ள மெட்ராஸ் இலக்கியச் சங்கக் கட்டடம் ரூ.6.19 கோடி மதிப்பீட்டிலும்,

5) திருச்சி டவுன்ஹாலில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் ரூ.4.85 கோடி மதிப்பீட்டிலும்,

6) கன்னியாகுமரி மாவட்டம், இடலாக்குடியில் அமைந்துள்ள சதாவதானி செய்குதம்பி பாவலர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்திலுள்ள கட்டடம் ரூ.3 கோடி மதிப்பீட்டிலும்,

7) ராணிப்பேட்டை மாவட்டம், பாலாறு நதிக் கரையிலுள்ள தேசிங்கு ராஜா மற்றும் ராணிபாய் நினைவுச் சின்னங்கள் ரூ.2.50 கோடி மதிப்பீட்டிலும் மறுசீரமைத்து புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். தரக்கட்டுப்பாடு உப கோட்டங்களுக்கு ஆய்வகங்கள் உருவாக்கப்படும்.

8) நான்கு தரக்கட்டுப்பாட்டு உப கோட்ட அலுவலகங்களுக்கு ஆய்வகங்கள், ஆய்வக உபகரணங்களுடன் ரூ.6 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும். உளுந்தூர்பேட்டையில் புதியதாக ஆய்வு மாளிகை கட்டப்படும்

சில அமைச்சர்கள் நினைத்து விடக்கூடாது அவர் உளுந்தூர்பேட்டை பொறுப்பு அமைச்சர் என்று; அதெல்லாம் இல்லை. உளுந்தூர்பேட்டை என்பது நகரின் மையப்பகுதியாக உள்ளது. நேரு அவர்கள் திருச்சியிலிருந்து வருகிறார். சென்னை வருகிற வரையிலும் எங்கும் தங்குவதற்குக்கூட இடவசதி கிடையாது. சேலத்திலிருந்து வருபவர்களுக்கும் உளுந்தூர்

## முதலமைச்சரின் முத்தாய்ப்பான திட்டத்தின் கீழ் ரூ.200 கோடியில் 50 தரைப்பாலங்கள் உயர்மட்டப் பாலங்களாக கட்டப்படும்!

பேட்டை என்பது ஒரு மையப்பகுதியாக உள்ளது. அங்கு ஆய்வு மாளிகை கட்டினால், ஓய்வு எடுப்பதற்கு அல்லது அரசுப் பணிகளை மேற்கொள்வதற்கு, அதிகாரிகளைச் சந்திப்பதற்கு வசதியாக இருக்கும். மேலும், முதலமைச்சர் அவர்களும் அடிக்கடி உளுந்தூர்பேட்டை வழியாக செல்கிறார்கள். அமைச்சர் பெருமக்களும், சிறப்பு விருந்தினர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரெல்லாம் செல்கின்ற வழியாக அது இருக்கிறது. (குறுக்கீடு) அப்படியென்றால், எங்களுக்கெல்லாம் இல்லையா என்று கேட்டால், உங்களுக்கும் சேர்த்துதான் சொல்கிறேன். எனவே, அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க, உளுந்தூர்பேட்டையில் புதிதாக ஓர் ஆய்வு மாளிகை இந்த ஆண்டு கட்டப்படும்.

9) கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர் பேட்டையில் புதியதாக ஓர் ஆய்வு மாளிகை கட்டப்படும்.

### நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

1. முதலமைச்சரின் பொன்னான திட்டங்களில் ஒன்றான "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் ஒரு புற வழிச் சாலை, ஒரு நடைமேம்பாலம், 6 சாலைகளை அகலப்படுத்தி மேம்பாடு செய்தல், 3 ஆற்றுப்பாலங்கள் மற்றும் ஒரு மழைநீர் வடிகால் கட்டுதல் ஆகிய பணிகளும் மற்றும் 6 புறவழிச்சாலைகள், ஒரு ஆற்றுப்பாலம் அமைக்க தேவையான நில எடுப்புப்பணிகளும் ரூ.1,055 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகமான கோரிக்கைகளை கொடுத்திருக்கி றார்கள். முதல்வர் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள்.

2. தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கு விரைவான சாலைப் போக்குவரத்தின் பங்கு மிகவும் இன்றியமையாதது; இச்சாலைகளை போக்குவரத்திற்கு ஏற்ப அகலப்படுத்தி மேம்பாடு செய்வதில் நெடுஞ்சாலைத்துறை மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. நெடுஞ்சாலைத்துறையின் செயல்பாட்டை மேலும் மேம்படுத்த தற்போது உள்ள சில அலகுகளை மாற்றியமைத்து பணிகளைப் பகிர்ந்து, துறையின் செயல்திறனை மேம்படுத்த நெடுஞ்சாலைத் துறை மறுசீரமைக்கப்படும்.

3. சீரான சாலைப் போக்குவரத்திற்கு பாலங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. குறிப்பாக ஆறுகள், நதிகள் மற்றும் ஓடைகளைக் கடக்கவும் மற்றும் இருப்புப் பாதையைக் கடக்கவும் பாலங்கள் மிகவும் அவசியமாகின்றன. நெடுஞ்சாலைத் துறையின் மூலம் 9,479 பாலங்கள் கட்டப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளன.

இப்பாலங்களை ஆய்வு செய்து, அதன் உறுதித் தன்மையை கண்டறிந்து பழுதுகள் ஏற்பட்டிருப்பின் அதனை உடனுக்குடன் சீரமைக்க வேண்டியுள்ளது. இதனைச் செயல்படுத்த தனிக்கவனம் செலுத்தி நிபுணத்துவம் வாய்ந்த நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களைக் கொண்ட "பாலங்கள் சிறப்பு ஆய்வு அலகு" ஒன்று நெடுஞ்சாலைத்துறையில் ஏற்படுத்தப்படும்.

4. இத்திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில், இதுவரை 577 கி.மீ. நீளச் சாலைகள் நான்கு வழிச்சாலையாக மற்றும் 1,710 கி.மீ. நீளச்சாலைகள் இருவழிச் சாலையாக மாற்றவும் பணிகள் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

நடப்பாண்டில், அவினாசிமேட்டுப்பாளையம் சாலை, ஈரோடுகரூர் சாலை மற்றும் இராமநாதபுரம்சிவகங்கை (வழி) மேலூர் சாலை உள்ளிட்ட 200 கி.மீ நீளச் சாலைகள் நான்கு வழித்தடச் சாலைகளாகவும், 550 கி.மீ. நீளச் சாலைகள் இருவழித் தடச் சாலைகளாகவும் அகலப்படுத்தப்படும். இதனால், போக்குவரத்து நெரிசல் குறைவதோடு தங்கு தடையற்ற பாதுகாப்பான போக்குவரத்து உறுதிப்படுத்தப்படும்.

5. காலநிலை மாற்றங்களால் ஏற்படும் வெள்ளப் பெருக்கினை கையாளும் விதமாக, தமிழ்நாடு முதலமைச்சரின் "அனைத்து காலநிலைகளிலும் தங்கு தடையற்ற போக்குவரத்துத் திட்டம்" (Chief Minister All Season Uninterrupted Connectivity Scheme) என்ற முத்தாய்ப்பான திட்டத்தின் கீழ் நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் உள்ள அனைத்து தரைப்பாலங்களும் உயர் மட்டப் பாலங்களாக 2026 ஆம் ஆண்டிற்குள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று நிதியாண்டுகளில், 1,146 தரைப்பாலங்கள் உயர் மட்டப் பாலங்களாக மாற்ற பல்வேறு திட்டங்களின் கீழ் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நடப்பாண்டில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் 50 தரைப்பாலங்கள் ரூ.200 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலங்களாகக் கட்டப்படும்.

6. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, விபத்தில்லா மாநிலம் என்ற இலக்கினை அடையவும், சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தவும், தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன்தொடர்பாக நடப்பாண்டில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் சாலை விபத்து களைத் தடுப்பதற்காக ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் சாலைச் சந்திப்புகள் மேம்பாடு செய்யப்படும்.

7. **புறவழிச்சாலைகள்:** தென்காசி மாவட்டத்தில் தென்காசி (கட்டம்1) நகருக்கு, இராணிபேட்டை மாவட்டத்தில் ஆற்காடு நகருக்கு, தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர் நகருக்கு திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி மேற்குப் புறவழிச்சாலை ஆகிய 4 புறவழிச்சாலைகளும் விருதுநகர் மாவட்டத்தில், இராஜபாளையம்சங்கரன் கோவில் திருநெல்வேலி சாலை (SH41 இராஜபாளையம் புதிய பேருந்து நிலையம்) முதல் திருமங்கலம் கொல்லம் சாலை (NH744 இராஜபாளையம் அரசு மருத்துவமனை) வரை இணைக்கும் புதிய இணைப்புச் சாலையும் ரூ. 321 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8.இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம் சுற்றுச்சாலை, தூத்துக்குடி மாவட்டத்தில், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் (கட்டம்1) புறவழிச்சாலை திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி (கட்டம்2) புறவழிச்சாலை, விருதுநகர் மாவட்டத்தில் வத்திராயிருப்பு மற்றும் மல்லாங்கிணறு புறவழிச்சாலை, என 5 புறவழிச்சாலைப் பணிகளுக்கும் மதுரை மாவட்டத்தில், மதுரை வெளிவட்டச் சாலை முதல் சிவகங்கை சாலை வரை (விரகனூர் முதல் சக்குடி வரை) புதிய சாலை அமைக்கவும், தஞ்சாவூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களை இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே மேலராமநல்லூரில் உயர்மட்டப்பாலம் அமைக்கவும் தேவையான நில எடுப்புப் பணிகள் ரூ.159 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

9. மயிலாடுதுறை மற்றும் கடலூர் மாவட்டங்களை இணைக்கும் வகையில் மணல்மேடு முதல் முட்டம் வழியாக சேத்தியாத்தோப்பு வரை புதிய சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

மதுரை மாநகரில் சிட்டம்பட்டி முதல் தென்காசி சாலையில் உள்ள ஆலம்பட்டி வரை புதிய வெளிவட்டச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.34 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

ஏனென்றால், நம்முடைய வேளாண்மைஉழவர் நலத் துறை அமைச்சரும், ம. சிந்தனை செல்வன் அவர்களும் என்னை தூங்க விடுவதில்லை. நான் உடனடியாக முதலமைச்சர் அவர்களிடம் இது மிகவும் முக்கியமானது என்று கூறினேன், இது முக்கியமானதும்கூட. அதேபோன்று நம்முடைய வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் (குறுக்கீடு) மதுரை குறித்த அறிவிப்புகள் இன்னும் முடியவில்லை.

10. சென்னை மாநகரில், வேளச்சேரி இரயில் நிலையப் பேருந்து நிறுத்தம் அருகில் மற்றும் சென்னை மாநகரின் உள்வட்டச் சாலையில் கோயம்பேடு சந்திப்பு அருகே நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் ரூ.35.80 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சென்னை மாநகரில், பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதியைப் பாதுகாக்கும் நோக்கில் காமாட்சி மருத்துவமனை முதல் துரைப்பாக்கம் வரை உயர்மட்டச் சாலை மேம்பாலம் அமைக்க ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

11. திண்டுக்கல் மாவட்டத்தில், ஒட்டன்சத்திரம் நகரில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் ரூ.14 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

திருவண்ணாமலை புதிய பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள இருப்புப் பாதையைக் கடக்க நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் ரூ.14 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். தி

ருவண்ணா மலை புதிய பேருந்து நிலையம் நம்முடைய நகராட்சித் துறையின் சார்பிலே கட்டப்படுகின்றது.

12. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் தொழிற்சாலைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், தொழிற்சாலைப் பொருள்களைத் தடையின்றி கொண்டு செல்லவும், தொழிற்சாலைகளை இணைக்கும் சாலைகள் மேம்படுத்தப்பட வேண்டும். எனவே, தொழிற்சாலைகளை இணைக்கும் சாலைகளை மேம்படுத்த முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தொழிற்சாலைப் பகுதிகளில் உள்ள சாலைகளை அகலப்படுத்தும்/வலுப்படுத்தும் பணிகள் ரூ.200 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

13. நிலச்சரிவினால் ஏற்படும் உயிரிழப்பு, பொருட்சேதம் ஆகியவற்றைத் தடுக்க நிலச்சரிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலைத்துறை மூலம் நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உதகை, கொடைக்கானல், ஏற்காடு போன்ற மலைப்பகுதிகளில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

14. கடந்த மூன்று ஆண்டுகளில், இதுவரை 2787 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி/ஊராட்சி ஒன்றியச் சாலைகளைத் தரம் உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில், மூன்றாம் கட்டமாக 600 கி.மீ. நீள ஊராட்சி/ஊராட்சி ஒன்றியச் சாலைகள் நபார்டு கடனுதவித் திட்டத்தின்கீழ் இதர மாவட்டச் சாலைகளாக ரூ.680 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

அதேபோன்று, நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், சாலைப் பணிகள் குறித்து 87 வெட்டுத் தீர்மானங்களும், பாலப் பணிகள் குறித்து 31 வெட்டுத் தீர்மானங்களும், இரயில்வே மேம்பாலங்கள் குறித்து 13 வெட்டுத் தீர்மானங்களும், கொள்கை பற்றி விவாதிக்கக் கோரி 27 வெட்டுத் தீர்மானங்களும், ஒப்பந்தங்கள் குறித்து 2 வெட்டுத் தீர்மானங்களும், பணி நியமனங்கள் குறித்து 2 வெட்டுத் தீர்மானங்களும், இதர பணிகள் குறித்து 10 வெட்டுத் தீர்மானங்களும், பிற துறையைச் சார்ந்து 6 வெட்டுத் தீர்மானங்களும், வடிகால்கள் குறித்து 3 வெட்டுத் தீர்மானங்களும், ஊராட்சிச் சாலைகள் மற்றும் இதர சாலைகளை தரமுயர்த்துவது குறித்து 3 வெட்டுத் தீர்மானங்களும் என ஆக மொத்தம் 183 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

பொதுப் பணித் துறையின் சார்பாக, அரசு அலுவலர்கள் குடியிருப்புகள் குறித்து 15 வெட்டுத் தீர்மானங்களும், ஆய்வு மாளிகைகள் குறித்து 14 வெட்டுத் தீர்மான ங்களும், பள்ளிக் கட்டடங்கள் குறித்து 5 வெட்டுத் தீர்மானங்களும், பாலங்கள் குறித்து 5 வெட்டுத் தீர்மானங்களும், இதர கட்டடங்கள் குறித்து 9 வெட்டுத் தீர்மானங்களும், கொள்கை பற்றி விவாதிக்கக் கோரி 5 வெட்டுத் தீர்மானங்க ளும் என ஆக மொத்தம் 54 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இன்றைய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களில் கலந்து கொண்டு பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு நல்ல ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். உறுப்பினர்கள் க.அன்பழகன், S. சந்திரன், செ.ஊர்வசி அமிர்தராஜ், ச.சிவகுமார், க.தேவராஜி, நயினார் நாகேந்திரன், ஆ.வெங்கடேசன் போன்றவர்கள் பல்வேறு ஆலோசனைகளையும், சில கருத்துகளையும் வழங்கியி ருக்கிறார்கள்; சில வேண்டுகோள்களையும் வைத்திருக்கிறார்கள்; வெட்டுத் தீர்மானங்களையும் கொடுத்திருக்கிறார்கள். பல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பேசுவதற்கு மிகவும் வாய்ப்பு குறைவு என்கிற காரணத்தினால், வெட்டுத் தீர்மானமாக அவர்களுடைய கருத்துகளெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இங்கு பேசிய உறுப்பினர் க.அன்பழகன் கும்பகோணம் புறவழிச்சாலை உள்ளிட்ட சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதை குறிப்பெடுத்து வைத்திருக்கிறேன். நானும் நேரடியாக கும்பகோ ணத்திற்குச் சென்று அதைப் பார்வையிட்டிருக்கிறேன். அதேபோன்று உறுப்பினர் எஸ்.சந்திரன், இருவழிச் சாலையை நான்குவழிச் சாலையாக்க வேண்டும் என்றும், திருத்தணி மலைப் பாதையை விரிவுபடுத்த வேண்டுமென்றும், பல பாலங்களைக் கட்ட வேண்டும் என்றும் கோரியிருக்கிறார். அவருக்கு உறுதுணையாக திருவள்ளூர் வி.ஜி. இராஜேந்திரனும், மாவட்ட வளர்ச்சி குறித்து சில கோரிக்கைகளை என்னிடம் வைத்திருக்கிறார்கள். அதையும் நான் குறிப்பெடுத்து வைத்திருக்கிறேன். அதேபோன்று, உறுப்பினர் ஆ.வெங்கடேசன், வாடிப்பட்டி முதல் தெத்தூர் மேட்டுப்பட்டி வரை சாலையை வரும் நிதியாண்டில் நிதிநிலை மைக்கேற்ப, போக்குவரத்து செறிவிற்கேற்ப விரிவு படுத்திட கேட்டுக்கொண்டதோடு மட்டுமல்லாமல், பல கோரிக்கைகளையும் எடுத்து வைத்திருக்கிறார். நான் அதை குறிப்பெடுத்து வைத்துக் கொண்டிருக்கிறேன்.

இதுபோன்று துறையின் சார்பாக பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்ததை நானே ஒவ்வொன்றாகப் படித்துப் பார்த்து குறிப்பெடுத்து வைத்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், எல்லாவற்றையும் செய்து கொடுக்க வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறார்கள். உங்களுக்கே தெரியும், ஆட்சியை எங்களிடம் ஒப்படைத்தபோது, 6 இலட்சத்து 28 ஆயிரம் கோடி ரூபாய் கடனை வைத்துவிட்டுத்தான் போனார்கள். ஆனாலும், அவர்கள் அறிவித்த திட்டங்களையும் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கிறோம் எனும்போது, இந்த ஆட்சிக்கு உற்ற துணையாக இருக்கும் உங்களுக்கு நாங்கள் செய்யாமலா இருப்போம்!

ஆகையால், அவற்றையெல்லாம் நாங்கள் குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறோம். புதிதாக வந்திருக்கிற நம்முடைய கன்னியாகுமரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அம்மையார் அவர்களும் கோரிக்கையினை கொடுத்திருக்கிறார். அவற்றையும் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். நிதிநிலைமைக்கேற்ப ஒன்றன்பின் ஒன்றாக கட்டாயம் அதையெல்லாம் செய்து முடிப்போம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கோரிக்கை குறித்து சொல்ல வில்லையே என்று நினைப்பார்கள்; ஆனால் சொல்வதற்கு நேரம் போதவில்லை. மொத்தமும் இருக்கிறது. ஆகையால், நீங்கள் கொடுத்தவைகளை கட்டாயம் ஒன்றன்பின் ஒன்றாக இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நீங்கள் கொடுத்ததை நான் நேற்றை யதினமே படித்துவிட்டு, துறைக்கு அனுப்பிவிட்டேன். மானியக் கோரிக்கை முடிந்த பிறகு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நானே நேரடியாக வந்து அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, அவற்றிற்கு முக்கியத்துவம் தருவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள், நீங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்று, இரண்டு துறை, பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையினுடைய மானியக் கோரிக்கையை ஏகமனதாக, ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

---

## எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்வு!

# அன்புச் சகோதரர் ராகுல் காந்தியின் குரல் மக்களவையில் மேலும் பலமாக ஒலிக்கட்டும்!

## வலைதளத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை,ஜூன்.26-

நாடாளுமன்ற மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்கவுள்ள ராகுல் காந்தி அவர்களை வாழ்த்தி வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்.

அதில் முதல்வர் அவர்கள், "அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களின் குரல், மக்களவையில் மேலும்பலமாகஒலிக்கட்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

**'இந்தியா' என் அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களை வரவேற்கிறது, அவரது புதிய பாத்திரத்திற்கு! ராகுல் காந்தி அவர்களின் குரல் மக்கள் மன்றத்தில் (லோக்சபா) தொடர்ந்து பலமாக ஒலிக்கட்டும்.**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



---

## பா.ஜ.வுக்கு மெஜாரிட்டி இல்லாததால்

# நாடாளுமன்றத்தில் போர் காட்சிக்கு பஞ்சம் இருக்காது!

## 'தினகரன்' தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஜூன் 26-

பா.ஜ. மெஜாரிட்டி இல்லாமல் ஆட்சி அமைத்தி ருப்பது குறித்து 'தினகரன்' நாளேடு நாடாளுமன்றத்தில் போர் காட்சிக்கு பஞ்சம் இருக்காது என தலையங்கத்தில் கருத்து தெரி வித்துள்ளது.

அது வருமாறு :-

நாடாளுமன்ற தேர்தலில் பாஜ கூட்டணி 293 இடங்களை கைப்பற்றியது. இதில் பா.ஜ மட்டும் 240 இடங்களை கைப்பற்றியது. காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி 234 தொகுதிகளில் வெற்றி பெற்று இருந்தது. இதில் காங்கிரஸ் கட்சி மட்டும் 99 இடங்களை பெற்று இருந்தது. புதிய ஆட்சி அமைக்க தேவையான 272 இடங்கள் எந்த கட்சிக்கும் கிடைக்க வில்லை. பா.ஜனதா தனித்து 240 இடங்கள் மட்டுமே பெற்றதால் மத்தியில் கூட்டணி ஆட்சியாக அமைந்தது பாஜ தலைவர்கள் மத்தியில் கசப்பை ஏற்படுத்தி யது. ஒன்றிய அமைச்சரவை பதவியேற்று 24 மணி நேரம் கழித்து அமைச்சர்களுக்கான இலாகா ஒதுக்கப் பட்டது.

இதில் கூட்டணி கட்சிகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த இலாகாக்கள் ஒதுக்கப்படவில்லை என்பது கூட்டணி கட்சியினர் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் புதிய சபாநாய



தினகரன்

ஜூன் 25, 2024 செவ்வாய்க்கிழமை

ஆரம்பமே அமர்க்களம்

நாடாளுமன்ற தேர்தலில் பாஜ கூட்டணி 293 இடங்களை கைப்பற்றியது. இதில் பா.ஜ மட்டும் 240 இடங்களை கைப்பற்றியது. காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி 234 தொகுதிகளில் வெற்றி பெற்று இருந்தது. இதில் காங்கிரஸ் கட்சி மட்டும் 99 இடங்களை பெற்று இருந்தது. புதிய ஆட்சி அமைக்க தேவையான 272 இடங்கள் எந்த கட்சிக்கும் கிடைக்கவில்லை. பா.ஜனதா தனித்து 240 இடங்கள் மட்டுமே பெற்றதால் மத்தியில் கூட்டணி ஆட்சியாக அமைந்தது பாஜ தலைவர்கள் மத்தியில் கசப்பை ஏற்படுத்தியது.

ஒன்றிய அமைச்சரவை பதவியேற்று 24 மணி நேரம் கழித்து அமைச்சர்களுக்கான இலாகா ஒதுக்கப்பட்டது. இதில் கூட்டணி கட்சிகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த இலாகாக்கள் ஒதுக்கப்படவில்லை என்பது கூட்டணி கட்சியினர் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் புதிய சபாநாயகர், துணை சபாநாயகர் தேர்வு குறித்து

கர், துணை சபாநாயகர் தேர்வு குறித்து இன்னும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. கடந்த காலங்க ளில் மக்களவை சபாநாயகர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். துணை சபாநாயகர் பதவியை எதிர்க் கட்சிக்கு விட்டு கொடுத்தால் கருத்தொற்றுமை அடிப்படையில் சபாநாயகர் தேர்வு செய்து கொள்ளலாம் என இந்தியா கூட்டணி தெரிவித் துள்ளது. இது நடக்காதபட்சத்தில் தேர்தல் மூலம் தேர்வு செய்வது தவிர்க்க முடியாததாகும்.

இதையடுத்து, நாடாளு மன்ற புதிய மக்களவை சபாநாயகரை தேர்வு செய்வதற்காக நேற்று சிறப்பு கூட்டத்தொடர் தொடங்கியது. புதிய சபாநாயகர் தேர்வு நாளை நடைபெறுகிறது. இந்நிலையில், மக்களவை தற்காலிக சபாநாயகராக பர்த்ருஹரி மஹ்தப்பை குடியரசு தலைவர் திரவுபதி முர்மு நியமித்து உத்தரவிட்டுள்ளார். ஒடிசா மாநில பா.ஜ. எம்.பி. யான இவர், நேற்று முதல் புதிய எம்பிக்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்து வருகிறார். கூட்டத்தொடர் துவங்கிய முதல் நாளிலேயே நாடாளுமன்ற வளாகத்தில் இருந்த காந்தி சிலையை இடமாற்றம் செய்ததை கண்டித்து அரசியல் சாசன புத்தகத்தை கைகளில் ஏந்தி இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் நேற்று போராட்டம் நடத்தினர்.

இதில் சோனியா காந்தி உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர். இதற்கிடையில் உறுதிமொழி ஏற்க வருமாறு தற்காலிக சபாநாயகர் விடுத்த அழைப்பை மூத்த எம்பிக்களான கொடிக்குன்னில் சுரேஷ், டி.ஆர்.பாலு ஆகியோர் நேற்று நிராகரித்தனர். முதல் நாளிலேயே மோடி அரசுக்கு இந்தியா கூட்டணி நெருக்கடி கொடுத்துள்ளது. தற்போது நீட் முறைகேடு விவகாரம் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. முறைகேடு குறித்து சி.பி.ஐ. விசாரணை தொடங்கி உள்ளது. ஏற்கனவே சமீபத்தில் ரத்து செய்யப்பட்ட யு.ஜி.சி. நெட் தேர்வு முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ. விசாரித்து வரும் நிலையில் நீட் முறைகேடுகள் குறித்தும் விசாரணை நடத்துகிறது. தொடர்ந்து கடைசி நேரத்தில் நீட் முதுகலை நுழைவு தேர்வு ஒத்திவைக்கப்பட்டதால் வினாத்தாள் கசிந்ததா என்பதும் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

அதோடு ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ள புதிய 3 குற்றவியல் சட்டங்கள் ஜூலை 1ம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளன. புதிய சட்டங்களையும் நடைமுறைப்படுத்தாமல் நிறுத்தி வைக்க வேண்டும் என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். இதுபோன்று காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளும் எதிர்ப்பு தெரிவிக்கின்றன. விலைவாசி உயர்வு, அதிகரிக்கும் ரயில் விபத்துகள் என அரசுக்கு எதிராக பல்வேறு விவகாரங்கள் இருப்பதால் புதிய ஆட்சியின் முதல் கூட்டத்தொடர் கடும் அமளிகளுடன் ஆரம்பிக்கும். பாஜவுக்கு தனி மெஜாரிட்டி இல்லாததால் இனி நாடாளுமன்றத்தில் போர் காட்சிக்கு பஞ்சம் இருக்காது.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு கருத்து தெரிவித்துள்ளது.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள செ.புதூர், செ.கொளப்பாக்கம் கிராமத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரித்தார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி கானை வடக்கு ஒன்றிய அத்தியூர் திருக்கை, புதுப்பேட்டை கக்கனூர், மங்களாபுரம் போரூர் துறவிதாங்கள் புதூர், அனுமந்தபுரம், திருக்குணம், அடங்குணம், டி.கொசப்பாளையம், வெங்கமூர், உடையாநத்தம் ஆகிய ஊராட்சிகளில் விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகத்துக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்கௌதமசிகாமணி வீதி, வீதியாக வாக்குகளைச் சேகரித்தார். மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் டாக்டர்.எ.வ.வே.கம்பன், சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அங்கயற்கண்ணி, விசிக மாவட்டச் செயலாளர் பெரியார், மாவட்ட துணைச் செயலாளர் ஆறுமுகம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.